இணை இயக்குநர் /உறுப்பினர் செயலர் (பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம்செங்கல்பட்டு அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை : திரு.A.சிவப்பிரகாசம்.A.M.I.E, M.Plan.,

ந.க.எண்:4606/2021 மாஉ.திகு. (செ.மா -5) நாள்:27.01.2022

பொருள்: குடியிருப்பு மனைப்பிரிவு - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் - செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் வட்டம், திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம், தாழம்பூர் ஊராட்சி/கிராமம், ச,எண்:33/3A1,3A2,3B-ல் 28250.0 சதுர மீட்டர் மனைப்பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கு திட்ட அனுமதி வழங்குதல் - குறித்து.

பார்வை :
1. மனுதாரர் Mrs. Regeena & Thanga Nila, Rep by GPA M/s.AAK Reality Services LLP, அவர்கள் கடிதம் மற்றும் இணைப்புகள் நாள்: 28.12.2021. (Online Application No:202100201017882, Date:20.12.2021)
2. 175-வது மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழும கூட்டம் தீர்மானம் எண்:2, நாள்: 02.11.2021.
3. இணை இயக்குநர்/உறுப்பினர் செயலர்(பொ), அவர்களின் கடிதம். ந.க.எண்:4606/2021 நாள்:06.01.2022. (சாலை அமைப்பு வரைபடம் ஒப்படைக்க கோரியது)
4. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்:19799/2020/போ நாள்:24.12.2020.
5. மனுதாரர் Mrs. Regeena & Thanga Nila, Rep by GPA M/s.AAK Reality Services LLP, அவர்களது கடிதம் நாள்:12.01.2022 (அசல் தானபத்திரம் (ம) வில்லங்க சான்று சமர்ப்பிக்கப்பட்டது)
6. அரசாணை (நிலை) எண்.138, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள்:04.06.2004.
7. அரசாணை (நிலை) எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள்:04.05.2017.
8. அரசாணை (நிலை) எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.31.01.2020.
9. அரசாணை எண்.141, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (UD4(3)) துறை நாள்:23.09.2020.
10. அரசாணை (நிலை) எண்:181, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை UD4(1), நாள்: 09.12.2020.
11. அரசு கடிதம் எண்:19113/நவ4(3)/2017-1, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்:30.08.2017.

For AAK REALTY SERVICES LLP
Authorised Signatory

12. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 13686/2017/எல்ஏ1, நாள். 08.09.2017.
13. நகர் ஊரமைப்பு இயக்குநர் அலுவலகம், சென்னை அவர்களது சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்:320/2022-TCP3, நாள்.07.01.2022.
14. இவ்வலுவலக கேட்பு கடிதம் இதே எண் நாள் :19.01.2022. (கட்டணங்கள் செலுத்தக் கோரியது)
15. மனுதாரர் Mrs. Regeena & Thanga Nila, Rep by GPA M/s.AAK Reality Services LLP, அவர்களின் கடிதம் நாள்:21.01.2022 (கட்டணங்கள் செலுத்தப்பட்டது)
16. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்:4367/2019 ந.ஊ 2, நாள்:14.10.2019.
17. தானப்பத்திரம் எண்கள்:10561/2012, நாள்.26.10.2012 மற்றும் 7554/2017, நாள்.21.07.2017 (அணுகு சாலை தானமளித்த விவரம்)
18. இவ்வலுலவக கடிதம் இதே எண், நாள்.06.01.2022, (தலைவர் தாழம்பூர் அவர்களிடம் அணுகு சாலை புழக்க சாலையாக நிலைநிறுத்த கோரியது )
19. தலைவர், தாழம்பூர் ஊராட்சி அவர்களின் கடிதம், நாள்.10.01.2022 (அணுகு சாலை ஊராட்சியின் புழக்க சாலையாக பயன்பாட்டில் உள்ளது என விவரம் பெறப்பட்டது)
20. செயற்பொறியாளர் நீர்வள ஆதார துறை, கீழ்பாலாறு வடிநில கோட்டம், காஞ்சிபுரம் அவர்களின் கடிதம். இவ.அ.1/கோ (NOC-தாழம்பூர்)/2021 நாள்.28.07.2021
21. வட்டாட்சியர், வண்டலூர் அவர்களின் சான்று கடித ந.க.எண்:1912/2021/அ1, நாள்:06.08.2021(உத்தேச மனையிட புல எண்கள் குறித்த சான்று பெறப்பட்டது)

**********

பார்வை 1-ல் சுட்டிய கடிதத்துடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு உத்தேசம் பரிசீலிக்கப்பட்டு, பார்வை 3-ல் சுட்டிய இவ்வலுவலக கடிதம் நாள்: 06.01.2022. மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் வழங்கப்பட்டது. பார்வை 5-ல் சுட்டிய கடிதம் மூலம் சாலை, மற்றும் பொது ஒதுக்கீடுகளை உள்ளாட்சியிடம் தானமாக தானப்பத்திரம் எண்:531/2022, நாள்.11.01.202-ல் ஒப்படைக்கப்பட்டு அதன் அசல் பெறப்பட்டுள்ளது அதனை தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

1. மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு **ம.வ/மா.உ.தி.கு.(செ.மா)எண்:10/2022** என எண்ணிடப்பட்டு 4 அசல் வரைபடங்கள் மற்றும் அசல் தானப்பத்திரம் மேல்நடவடிக்கைகாக இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

For AAK REALTY SERVICES LLP
Authorised Signatory

2. மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண்:9 (ஆ)-ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.
3. உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு, நில அளவை துறைக்கும், தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.
4. செயலாணைக் கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகைச்சான்றினை உடன் அனுப்பிவைக்குமாறும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.
5. பார்வை 2-ல் கண்ட குழும கூட்ட தீர்மானம் அதிகார பகிர்வின் படி இம்மனைப்பிரிவிற்கு திட்ட அனுமதி வழங்கப்படுகிறது.
6. பார்வை 13-ல் கண்ட சுற்றறிக்கையின் படி செயலாணை கடிதம் மற்றும் வரைபடத்தினை வட்டாட்சியர் தமிழ்நிலம் மென்பொருளில் பதிவேற்றம் செய்யும் பொருட்டு அனுப்பி வைக்கப்படுகிறது.
7. பார்வை 20-ல் கண்ட செயற்பொறியாளர் நீர்வள ஆதார துறை, கீழ்பாலாறு வடிநில கோட்டம், காஞ்சிபுரம் அவர்களின் கடிதத்தில் தெரிவித்தபடியும், அதிலுள்ள நிபந்தனைகளின்படியும் உத்தேச மனையிடத்திற்கு சென்றுவர சம்மந்தப்பட்ட துறையின் முன் அனுமதி பெற்று பாலம் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும்.

<u>சிறப்பு நிபந்தனைகள்</u>

1. (a) பார்வை 10 -ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை 8-ல் கண்ட TNCDBR-2019 விதி எண்.47 (11) -ன்படியும் மாநகராட்சி/நகராட்சி பகுதி எனில் "Collecting the necessary fees including the charges for providing amenities like roads, storm water drains and street lights from the applicants" After collecting the necessary fees the final layout sketch, permit of planning authority along with approval of Local Body shall be issued to the applicant(s) directly.

   (b) மாநகராட்சி/நகராட்சி அல்லாத பகுதிகளில் "Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of planning authority along with the permit of local body to the applicant(s) directly, only after ensuring that the applicant lays tar roads, provide other amenitites like storm water drains, water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc., as per the standards specified by the local body".

2. (EWS) பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில்

For AAK REALTY SERVICES LLP
Authorised Signatory

மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும் (EWS) மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண்:16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்:31.01.2020-ன்படி (EWS) மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

3. பார்வை 11 மற்றும் 12-ல் கண்ட அரசு கடிதம் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண், உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

4. "The Tamil Nadu Government in G.O.Ms. No.112, Housing and Urban Development Department dated 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016, The promoter has to advertise, Market, book sell or offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Authority -ன்படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

5. பார்வை 7-ல் கண்டுள்ள அரசாணையின்படி திட்டமில்லா பகுதி/திட்டப்பகுதியில் அமையும் மனைப்பிரிவு எனில் விதி எண்:3-ன்படி கூராய்வு கட்டணமாக ரூ.1000/- ஐயும் மற்றும் விதி எண்:9-ன்படி இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகையை நிலப்பயன் மாற்றக் கட்டணமாகவும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் வசூல் செய்த பிறகே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

6, நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்:12544/14/சிபி, நாள்:04.07.2014-ன்படி "நகர் ஊரமைப்பு துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப் பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

For AAK REALTY SERVICES LLP

Authorised Signatory

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். மேலும், அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்பு துறை பொருத்தமான அமைப்பு அல்ல".

7. பார்வை 6 மற்றும் 8-ல் காண் அரசாணையின்படி மனைகளுக்கான நன்னிலை வரி, மற்றும் இதர கட்டணங்களான வளர்ச்சிக் கட்டணம், கூராய்வுக் கட்டணம், Display Board கட்டணம் , Armed Force Flag Day Fund கட்டணம் ஆகியவை பார்வை (14) -ல் சுட்டியவாறு கோரப்பட்டு பார்வை 15-ல் கண்ட மனுதாரின் கடிதம் மூலம் அரசுக்கு செலுத்தப்படவேண்டிய அனைத்து கட்டணங்களும் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது அதற்கான விவரம் பின்வருமாறு :

   i. நன்னிலை வரி கட்டணம் ரூ.39,000/-க்கான SBI, Chengalpattu கிளை, நாள். 21.01.2022-ல் செலுத்தியதற்கான கருவூலக செலுத்து சீட்டு பெறப்பட்டுள்ளது.

   ii. Display Board கட்டணம் ரூ.10,000/-க்கான IOB மாமல்லபுரம் வங்கி கிளை இவ்வலுவலக கணக்கு எண். 40000-த்தில் உறுப்பினர் செயலர், மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம், தலைப்பில் நாள்.21.01.2022-ல் செலுத்தப்பட்டு அதற்கான விவரம் பெறப்பட்டுள்ளது.

   iii. அபிவிருத்தி கட்டணம் ரூ.1,13,500/-க்கான IOB மாமல்லபுரம் வங்கி கிளை இவ்வலுவலக கணக்கு எண். 40000-த்தில் உறுப்பினர் செயலர், மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம், தலைப்பில் நாள்.21.01.2022-ல் செலுத்தப்பட்டு அதற்கான விவரம் பெறப்பட்டுள்ளது.

   iv. ரூ.8,000/-க்கான Armed Force Flag Day Fund என்ற பெயரில் Payable at Chengalpattu, SBI Bank, Chengalpattu Branch, D.D.No:983535, Dt:21.01.2022-ல் பெறப்பட்டுள்ளது.

   v. கூராய்வு கட்டணம் ரூ.42,300/-க்கான IOB மாமல்லபுரம் வங்கி கிளைஇவ்வலுவலக கணக்கு எண். 40000-த்தில் உறுப்பினர் செயலர், மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம், தலைப்பில் நாள்.20.12.2021-ல் செலுத்தப்பட்டு அதற்கான விவரம் பெறப்பட்டுள்ளது.

27/01/22

இணை இயக்குநர் /உறுப்பினர் செயலர்(பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
செங்கல்பட்டு மாவட்டம்.

25/1/22

For AAK REALTY SERVICES LLP
Authorised Signatory

இணைப்பு :
1.மனைப்பிரிவு வரைபடம் (ம)
மனைப்பிரிவு நிபந்தனைகள் - 4 தொகுப்புகள்.
2.அசல் தானப்பத்திரம் எண்: 531/2022, நாள்.11.01.2022

<u>பெறுநர்:</u>
தலைவர்,
தாழம்பூர் ஊராட்சி/கிராமம்,
வண்டலூர் வட்டம்,
திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்,
செங்கல்பட்டு மாவட்டம்.

<u>நகல்:</u>

1. M/s. Rageena alias Thanga Nila,
Rep by GPA M/s.AAK Reality services LLP.,
NPL Devi, 1st Floor, No.111,LB road,
Thiruvanmiyur,Chennai 600 041.
Ph.95000 70392.
E.mail.sakar@casagrand.co.in

2.உறுப்பினர் செயலர்(பொ),
மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம்,
செங்கல்பட்டு மாவட்டம்.
(இருப்பு கோப்பு)

3.The Tamil Nadu Real Estate Regulatory Authority (TNRERA),
No:1A, 1st Floor,
Gandhi Irwin Bridge Road,
Egmore, Chennai 600 008.

4. நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்கள்,
சி.எம்.டி.ஏ அலுவலக வளாகம்,
(2nd, 3rd, 4th Floor),
E & C மார்க்கெட் ரோடு, கோயம்பேடு,
Email: dtcpchennai@gmail.com
சென்னை - 600 107.
Phone No:044 -29585161

5. வட்டாட்சியர்,
திருப்போரூர் வட்டம்,
செங்கல்பட்டு மாவட்டம்.

For AAK REALTY SERVICES LLP
Authorised Signatory

## தாழம்பூர் முதல்நிலை ஊராட்சி மன்றத்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை - திரு.D.முனுசாமி.

நாள்.22.02.2022

ந.க.எண்.T.24/2022/ஊ.செ.

பொருள் - கட்டிட வரைபட அனுமதி - திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் - தாழம்பூர் ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்.33/3B-ல் M/s.AAK Realty Services LLP., என்பவரின் பிளாட் எண்.25-ல் 164சதுரமீட்டர் பரப்புள்ள இடத்தில் தரைதளம் 760.25சதுரடி, முதல்தளம் 924.74சதுரடி, ஆகமொத்தம் 1682.09சதுரடியில் வீடு கட்ட கட்டிட வரைபட அனுமதி வழங்கி உத்திரவிடுதல்.

பார்வை - 1.நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் ந.க.எண்.5411/19/செம3 நாள்.14.10.19.
2.நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.4367/19/ந.ஊ2 நாள்.24.09.2019.
3. மனுதாரர் M/s.AAK Realty Services LLP., என்பவரின் கடிதம்
4. ம.வ./மா.உ.தி.கு.(செ.மா) எண்.10/2022 நாள்.27.01.2022.
5.தாழம்பூர் ஊராட்சி மன்றத்தீர்மனம் எண்.49 நாள்.11.02.2022.
பலவகை ரசீது எண்.824 நாள்.22.02.2022.

********

(செங்கல்பட்டு மாவட்டம் * தாழம்பூர் ஊராட்சி * திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்)

**உத்தரவு -**

திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம், தாழம்பூர் ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்.33/3B-ல் M/s.AAK Realty Services LLP., என்பவரின் பிளாட் எண்.25-ல் 164சதுரமீட்டர் பரப்புள்ள இடத்தில் தரைதளம் 760.25சதுரடி, முதல்தளம் 924.74சதுரடி, ஆகமொத்தம் 1682.09சதுரடியில் வீடு கட்ட கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு கட்டிட வரைபட அனுமதி வழங்கி உத்தரவிடப்படுகிறது.

இந்த அனுமதியானது 22.02.2022 முதல் 21.02.2023 தேதி வரை ஒரு ஆண்டுக்கு செல்லுபடியாகும். அனுமதி கட்டணம் ரூ.14,707/- வங்கிவரைவாக தாழம்பூர் ஊராட்சியில் செலுத்தப்பட்டு, அதன் ரசீது மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

கட்டிட தொழிளாலர் நலநிதி, ரூ.21,867/- யூனியன் பாங்க் ஆஃப் இந்தியா வங்கியில் சம்மந்தப்பட்ட கணக்கு எண்.530601010038239-ல் RTGS மூலமாக செலுத்தப்பட்டுள்ளது.

### நிபந்தனைகள்

1. கட்டிடத்தின் முன் பக்கத்தில் 1.5 மீட்டருக்கு குறையாமலும் பின் பகுதியில் 1.5 மீட்டருக்கு குறையாமலும் இரு பக்கங்களிலும் 2 மீட்டருக்கு குறையாமலும் இடைவெளி விடப்பட்டிருக்க வேண்டும்.
2. தமிழ்நாடு ஊராட்சியின் 1994ம் ஆண்டு சட்டத்தின்படி சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும விதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள எல்லா கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டிருத்தல் வேண்டும்.
3. அரசாங்கத்திற்கு சொந்தமான இடங்களிலோ அல்லது இம்மனுதாரருக்கு சம்மந்தமில்லாத வேறு இடங்களிலோ ஆக்கிரமணம் செய்வது கூடாது.

For AAK REALTY SERVICES LLP

Authorised Signatory